மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தான்குளம்

முன்னிலை திரு.M.சிவராஜேஷ், B.B.A.L.L.B.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி, சாத்தான்குளம்.

2026ம் ஆண்டு ஜீலை மாதம் 06ஆம் நாள் திங்கள்கிழமை

இ.ம.எண்.1/2026

in

அ.வ எண்.84/2025

பாப்பாத்தி ... மனுதாரர்/1வது பிரதிவாதி

/ எதிர் /

பெருமாள் ... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனுவானது 25.06.2026 இன்று இறுதி விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்/1வது பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.அந்தோணி மைக்கேல் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.T.பஞ்சாப் சேகர் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதம் கேட்கப்பட்டும், மனு மற்றும் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டு இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

உத்தரவு

இம்மனுவானது மேற்படி வழக்கில் 07.02.2026 அன்று கனம் நீதிமன்றம் மனுதாரர்/1வது பிரதிவாதிக்கு எதிராக பிறப்பித்துள்ள உத்தரவினை ரத்து செய்து உத்தரவிட வேண்டி மனுதாரரால் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 9 விதி 7 பிரிவு 151–ன்படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரரின் மனுவின் சுருக்கம்:–**

2.1 அசல் வழக்கில் பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்காக 07.02.2026 அன்று வாய்தா போடப்பட்டிருந்தது. மேற்படி தேதியில் காமாலை நோயினால் பாதிக்கப்பட்டிருந்ததால் தன்னால் 07.02.2026 அன்று நீதிமன்றத்தில் தோன்றா இயலவில்லை. மனுதாரர்/1வது பிரதிவாதியின் பாதுகாப்பில் இருந்துவரும் 3வது பிரதிவாதி புத்திசுவாதினம் இல்லாதவராகவும், 4வது பிரதிவாதி எழுந்து நடக்க இயலாத மாற்றுதிறனாளியாகவும் இருப்பதால் மனுதாரர்/1வது பிரதிவாதியால் வழக்கறிஞரையும் தொடர்புகொள்ள இயலவில்லை.

2.2 கனம் நீதிமன்றத்தில் அ.வ.எண் 10/2026 வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்காக கைரேகை வைப்பதற்காக கடந்த 17.6.2026 அன்று வழக்கறிஞரை சந்தித்தப்போதுதான் 07.02.2026 அன்று மேற்படி வழக்கில் கனம் நீதிமன்றம் மனுதாரர்/1வது பிரதிவாதிக்கு எதிராக ஒருதலைபட்சமாக தீர்மானித்து உத்தரவு பிறப்பித்துள்ள விபரம் தெரியவந்தது. 07.02.2026 அன்று மேற்படி வழக்கில் கனம் நீதிமன்றத்தில் மனுதாரர்/1வது பிரதிவாதி தோன்றா முடியாமல் போனது மேலே கண்ட காரணத்தினால் மட்டுமே, மேற்படியான தவறுகை வேண்டுமென்று ஏற்பட்டதல்ல.

2.3 மனுதாரர்/1வது பிரதிவாதி எவ்விதமான வருமானமும் இல்லாமல் முதியோர் உதவிதொகையினை மட்டுமே வாழ்வாதாரமாக வைத்து புத்திசுவாதினமில்லாத 3வது பிரதிவாதியையும், மாற்றுதிறனாளியான 4வது பிரதிவாதியையும் பராமரித்து கொண்டு கஷ்ட ஜீவனம் நடத்தி வருகிறார். வழக்கு சொத்து மட்டுமே மனுதாரர்/1வது பிரதிவாதிக்கான ஒரே வாழ்வாதாரமாகும். மேற்படி வழக்கில் மனுதாரர்/1வது பிரதிவாதிக்கு நல்ல கட்சி உள்ளது எனவே 07.02.2026 அன்று மேற்படி வழக்கில் கனம் நீதிமன்றம் மனுதாரர்/1வது பிரதிவாதிக்கு எதிராக பிறப்பித்துள்ள உத்தரவினை கனம் நீதிமன்றம் நீக்கம் செய்ய வேண்டி இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளார். இந்த மனு அனுமதியாவிடில் மனுதாரர்/1வது பிரதிவாதிக்கு அளவிட முடியாத கஷ்டமும், நஷ்டமும் ஏற்படும் என மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் எதிருரை இல்லை என்றும் நீதிமன்றம் நீதியின்பால் முடிவு செய்யலாம் என்று மேலெழுத்து செய்யப்பட்டது.

4. இம்மனுவில் தீர்மானிக்க படவேண்டிய பிரச்சனை யாதெனில் மனுதாரரின் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதாகும்.

5. இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது, ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இருதரப்பிலும் சாட்சியம், சான்றாவணங்கள் இல்லை.

6. தீர்வு:

மனுவானது மேற்படி வழக்கில் 07.02.2026 அன்று கனம் நீதிமன்றம் மனுதாரர்/1வது பிரதிவாதிக்கு எதிராக பிறப்பித்துள்ள உத்தரவினை ரத்து செய்து உத்தரவிட வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் என்று கூறியுள்ளதை கருத்தில் கொண்டும் இரு தரப்பினருக்கும் தங்களது வழக்கினை

நிரூபிக்க ஒரு வாய்ப்புகொடுக்க வேண்டும் என்பதை கருத்தில் கொண்டும், வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலையை கருத்தில் கொண்டும் நீதியின் நலனை கருத்தில் கொண்டும், மனுதாரின் மனுவை அனுமதிப்பது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மனுதாரரின் செயலால் எதிர்மனுதாரருக்கு ஏற்பட்ட காலவிரயத்திற்கு ஈடாக எதிர்மனுதாரருக்கு செலவுத் தொகை வழங்க உத்தரவிடுவதன் மூலம் எதிர்மனுதாரருக்கு ஏற்பட்ட கஷ்ட நஷ்டத்தை சரி செய்யலாம் என்றும், இந்நீதிமன்றம் கருதுகிறது.

**முடிவாக,**

**இம்மனு அனுமதிக்கலாம் என தீர்மானித்து மனுதாரர்/1வது பிரதிவாதி, வரும் 10.07.2026ம் தேதிக்குள் எதிர்மனுதாரர்/வாதிக்கு செலவுத் தொகையாக ரூபாய் (ரூ.2000/-) இரண்டாயிரம் செலுத்தும் பட்சத்தில் இம்மனுவை அனுமதித்தும் தவறும் பட்சத்தில் மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. அடுத்த வாய்தா 13.07.2026**

இவ்வுத்தரவு என்னால் நேரடியாக சுருக்கெழுத்து - தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு இன்று 2026ம் ஆண்டு ஜீலை மாதம் 06ம் நாள் திங்கள்கிழமை திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

Sd/-திரு.M.சிவராஜேஷ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தான்குளம்.

மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் - இல்லை

எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் - இல்லை

Sd/-திரு.M.சிவராஜேஷ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தான்குளம்.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
சாத்தான்குளம்.
இ.ம.எண்.01/2026 இன்
அ.வ.எண்.84/2025
நேரிய/வரைவுஉத்தரவு
நாள் 07.07.2026